ISSN - 2235-9796

12 பக்கங்கள் 30/-


# Valai வலை

சமகால பொது அறிவுத் தொகுப்பு

உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்

சிலந்தி - 03 மார்ச் - 2014 இழை - 30

**வாசக நெஞ்சங்களுக்கு...!**




பிம்ஸ்டெக் 10

வலையின் இதழ் 30 ஆவது இழையில், உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எப்படி சௌக்கியமாக இருக்கிறீர்களா?

இலட்சியங்களும், ஆசைகளும் யாருக்குத்தான் இல்லை. எமது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான இலட்சியங்கள் உண்டு.

ஒருவருக்கு இசையில் சிறந்து விளங்க வேண்டும் என்றும், இன்னுமொருவருக்கு இன்ஜினியரிங் படிக்க வேண்டும் என்றும் ஆசை இருக்கும்.




ஒரு சிலருக்கு மிகப்பெரிய மருத்துவராகத் திகழ வேண்டும், மிகச் சிறந்த ஓவியராக, எழுத்தாளராக மிளிர வேண்டும் என்றெல்லாம் ஆசைப்படுகிறவர்கள் நிறைய உண்டு.

ஆக வாழ்க்கையில் ஒதேனும் ஒரு விதத்தில் தேர்ச்சி பெற்று, எப்படியாவது முன்னுக்கு வந்துவிட வேண்டும் என்றும் இலட்சியம் எல்லோருக்கும் இருக்கத்தான் செய்கிறது.

திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை என்பார்கள் வாழ்வில் நமக்கென ஒரு திக்குத் திசை கிடைக்க வேண்டும். நமக்குப் பிடித்த துறையைத் தெரிவு செய்து சாதிக்க வேண்டும் என ஏங்காத மனிதர்களே இல்லை.




எல்லாம் வல்ல இறைவனின் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு செயல்பட்டால் வாழ்வில் நிச்சயம் ஏற்றம் கிடைக்கும். நமக்கு பேஸ்புக்கில் அரட்டை அடிக்க வேண்டும், ரியூசனுக்குச் செல்ல வேண்டும், சினிமா பார்க்க வேண்டும், ஊர்சுற்ற வேண்டும், இறைபதம் அமர்ந்து தியானிக்க எங்கே நேரம் இருக்கிறது...? என்று என்னைக் கேட்பது எனக்குப் புரிகிறது.

இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே உங்கள் ஆதரவில் எனது பணி தொடரும்...

- 'வலை' வீசல் தொடரும்...


வாசகர்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன...

நன்றி.

சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்

## இம்மாத சர்வதேச தினங்கள்...

✧ மார்ச் - 03 - உலக தொழிலாளர் பாதுகாப்பு தினம்
✧ மார்ச் - 06 - உலக தொழுநோய் முற்றிலும் ஒழிப்பு தினம்
✧ மார்ச் - 08 - உலக மகளிர் தினம்
✧ மார்ச் - 11 - உலக பொதுநலவாய தினம் மற்றும் உலக முஸ்லிம் கலாசார, சமாதான கலந்துரையாடல் தினம்
✧ மார்ச் - 13 - உலக சிக்கன தினம்
✧ மார்ச் - 15 - உலக நுகர்வோர் உரிமைகள் தினம்
✧ மார்ச் - 15 - உலக ஊனமுற்றோர் தினம்
✧ மார்ச் - 15 - உலக தொடர்பு தினம்
✧ மார்ச் - 20 - உலக வாய் ஆரோக்கிய தினம்
✧ மார்ச் - 21 - உலக காடுகள் / வன தினம்
✧ மார்ச் - 22 - உலக குடிநீர் தினம் (2013 ஆம் ஆண்டை ஐ.நா.சபை சர்வதேச நீர் கூட்டுறவு ஆண்டாக பிரகடனம் செய்துள் ளமை இங்கு குறிப்பிடத்தக்கது)
✧ மார்ச் - 23 - உலக வானியல்/வளிமண்டலவியல் தினம்
✧ மார்ச் - 24 - உலக காசநோய் தினம்
✧ மார்ச் - 25 - உலக செஞ்சிலுவை தினம்
✧ மார்ச் - 27 - உலக நாடக தினம்




⊙ இலங்கையில் வருடந்தோறும் பொலிஸ் ஞாபகார்த்த தினம் எப்போது கொண்டாடப்படுகிறது? மார்ச் 21

## இலங்கை பற்றிய இம்மாத வலை வீசலில்...

❒ நாட்டில் தற்போது கால்நடைகளுக்கு பரவி வரும் நோய் யாது? ‘கால்வாய்’
Foot and Mouth Vaceine
இது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மருந்து ஆகும். இந்நோய் வரண்ட வலயத்தில் கூடுதலாக பரவுகின்றது. அதாவது மாட்டு சாணத்திலிருந்து பரவுகிறது.
இந்நோய் அதிகமாக வவுனியாவிலும், இரண்டாவது அம்பாறை மாவட்டத்திலும் அடுத்ததாக புத்தளம் மாவட்டத்திலும் பரவியுள்ளன.

❒ ஒன்பதாவது தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தி கண்காட்சி எங்கே நடைபெறவுள்ளது?
தென் மாகாணத்தில்

❒ இவ்வாண்டு (2014) சட்டத்தின் ஆட்சி சுட்டியில் தெற்காசிய நாடு களில் இலங்கை எத்தனையாவது இடத்தில் உள்ளது?
முதலாவது
உலகளாவிய ரீதியில் 99 நாடுகளின் மத்தியில், இலங்கை 48 ஆவது இடத்தில் உள்ளது.
அத்துடன் நேபாளம்-57, இந்தியா-66, பங்களாதேஷ்-92, பாகிஸ்தான் -96, ஆப்கானிஸ்தான்-98

❒ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம், விவசாய பீடம் என்பன அமைக்கப்பட்டுள்ள இடம் எது?
கிளிநொச்சி அறிவியல் நகர்

❒ பார்த்தீனியப் பாதிப்பை சித்திரிக்கும் குறுந்திரைப்படம் அண்மையில் யாழில் வெளியிடப்பட்டது. அத்திரைப்படத்தின் பெயர் என்ன?
“பயங்கரம்”

❒ திருமணம் செய்து கொள்வதற்காக சிறந்த நாடு மற்றும் தேனிலவைக் கொண்டாடுவதற்காக சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை எத்த னையாவது இடத்தில் உள்ளது?
இரண்டாவது இடத்தில்

❒ இந்த மாதம் (மார்ச்) ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்ன காரணத்துக் காக மியான்மார் சென்றார்?
‘பிம்ஸ்டெக்’ அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக....

❒ தற்போது மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் இலங்கையின் பழப்பயிர் எது?
பப்பாசி

❒ இலங்கையில் ‘லக்ஸ்ஷறி ஆர்ட்’ நிறுவனத்தால் கொலை குற்றச் செயல்களை மையமாக வைத்து தயாரிக்கப்பட்ட தமிழ்த் திரைப்படம் எது?
‘மலரே மௌனமா?’

❒ இலங்கையின் இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கிய சர்வதேச நிறுவனம் எது?
ஆசிய அபிவிருத்தி வங்கி

////////////////////////////////////////////////////////////////////////////////

- இலங்கையில் 'Cardless' முறையினை அறிமுகப்படுத்தியுள்ள வங்கி எது? சம்பத் வங்கி

- உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டு அண்மையில் (2014 மார்ச் முதல் வாரத்தில்) இலங்கை வந்து சென்ற ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி யார்?
  ஹமீட் கர்ஸாப்

- சர்வதேச ஸ்மார்ட் தொலைபேசி மென்பொருள் உற்பத்திப் போட்டியில் இலங்கை சார்பில் பங்கு பற்றி இலங்கைக்கு பெருமை சேர்த்த இளம் மென்பொருள் உற்பத்தியாளர் யார்?
  - எம்.எஸ்.ஹேஷான்
  - தாரக்க விஜேபண்டார

## இலங்கையில் இன்று இவர்கள்...

- இலங்கையில் தற்போதைய புதிய விமானப் படைத்தளபதி யார்? எயார் மார்ஷல் கோவித குணதிலக
  (இவர் 28.02.2014 இல் பொறுப்பெடுத்தார்)

- யாழ்ப்பாணத்தில் புதிய இந்திய உதவித் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்? ஏ.நடராஜன்
  இதேவேளை ஏற்கனவே பணியாற்றிய எஸ்.மகாலிங்கம் மேற்கிந்தியாவுக்கு மாற்றமாகியுள்ளார்.

- பங்கு முகவர்கள் சம்மேளனத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்? டிஹான் தெடிகமகே

- இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் யார்? நொகுவிறிட்டோ

- இலங்கை வாலிபர் சங்கத்தின் புதிய தலைவர் யார்?
  ஹர்ஷ அபேவிக்கிரம

## உலகை நோக்கிய இம்மாத வலை வீசலில்...

- சர்வதேச நாடுகளில் ஏற்படும் மழை வீழ்ச்சியைக் கண்காணிப்பதற்காக புதிய செயற்கைக் கோள் ஒன்றை விண்ணுக்கு செலுத்தியுள்ள நாடு எது? ஜப்பான்

◈ மிகப் பழைமையான தேவாலயம் எந்த நாட்டில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது?
ஜேர்மனியின் மெயின்ஸ் நகரில்

◈ இவ் வருடத்துக்கான (2014) போர்ப்ஸ் சஞ்சிகையில் வெளியிடப்பட்ட உலகின் மிகப்பெரிய பணக்காரர் பட்டியலில் முதலிடத்தில் உள்ளவர் யார்?
பில்கேட்ஸ்
இரண்டாவது - கார்லொஸ் சிலிம் - தென் அமெரிக்கா (தொலைத் தொர்பாடல் ஜம்பாவன்)
மூன்றாவது - அமன் ஓர்டெகா (நவநாகரிக தொழில் துறை)
இதேவேளை, இந்தியாவில் முதலிடத்தில் முகேஷ் அம்பானி உள்ளார்.
இவர் உலக மட்டத்தில் 41 ஆவது இடத்தில் உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

◈ பண்டைய வைரஸ் ஒன்று 30 ஆயிரம் ஆண்டுகள் செயலற்று இருந்து மீண்டும் உயிர் பெற்றிருப்பதாக பிரான் விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்ட வைரசின் பெயர் யாது?
பிதோவ வைரஸ்

◈ 2014 மார்ச் மாத முற்பகுதியில் பூமிக்கு மிக அருகில் பயணித்த விண் கல்லின் பெயர் என்ன?
'2014 டி.எக்ஸ்.110'

◈ உலகில் முதன்மை வகிக்கும் மிகப்பெரிய முதலீட்டு நாடு எது?
அமெரிக்கா
முறையே இரண்டாவதாக ஜப்பானும்,
மூன்றாவதாக சீனாவும் முன்னிலை வகிக்கின்றன.

◈ உலக மனிதவள மூலதனக் குறியீட்டுப் பட்டியலில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
சுவீட்சர்லாந்து

◈ உலகிலேயே அதிக கோடீஸ்வரர்களைக் கொண்ட நாடென முதலிடத்தில் உள்ள நாடு எது?
அரபு நாடான கத்தார்

◇ உலகின் எட்டாவது கிழக்காசிய உச்சி மாநாடு எங்கே நடைபெற்றது?
புருனையில்

◇ உலகில் வர்த்தகத்துக்கு உகந்த நாடுகளில் முதலாவது இடத்தைப் பிடித்த நாடு எது?
சிங்கப்பூர்

◇ உலகின் சுபீட்சமான நாடுகளின் பட்டியலில் முதலிடத்தை வகிக்கும் நாடு எது?
நோர்வே
அத்துடன் இரண்டாவது இடத்தினை சுவீட்சர்லாந்து, மூன்றாவது இடத்தினை கனடாவும் பெற்றுள்ளன.
இதேவேளை, இலங்கை 60 ஆவது இடத்தினைப் பெற்றுள்ளது. (லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் வகடான் நிறுவனம் நடத்திய கணிப்பிலிருந்து.....)

◇ உலகின் தலைசிறந்த 80 பெண் தொழில் அதிபர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துக் கொண்டவர் யார்?
மரியா டாஸ் கிராஸஸ் (பிரேசில் நாட்டின் எண்ணெய்க் கம்பனி)
இரண்டாவது இடம் : சபான்ஸி ஹோல்டிங் குலெர் சபான்சி (துருக்கி)
மூன்றாவது : கெய்ல் கெல்லி (அவுஸ்ரேலியா)

◇ 300 அடி நீளம் கொண்ட உலகின் மிக நீளமான விமானத்தை அண்மையில் அறிமுகம் செய்துள்ள நாடு எது?
பிரித்தானியா

◇ கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை அண்மையில் பரிசோதித்த நாடு எது?
ரஷ்யா

◇ பிரித்தானியாவிலிருந்து தனிநாடாக சுதந்திரம் பெறுவது தொடர்பாக எதிர்வரும் 2014 செப்ரெம்பர் மாதத்தில் கருத்துக் கணிப்பு நடைபெறவுள்ள பிரதேசம் எது?
ஸ்கொட்லாந்து

◇ நான்கு குறுந்தூர ஏவுகணைகளை அண்மையில் ஏவி பரிசோதனை செய்த நாடு எது?
வடகொரியா

◇ பிரித்தானிய பொருளாதார புலனாய்வுப் பிரிவால் வெளியிடப்பட்ட தகவலில் உலகின் வாழ்க்கைச் செலவு கூடிய நகரமாக இடம்பிடித்துள்ள நகர் எது?
சிங்கப்பூர்
இதேவேளை, உலகின் வாழ்க்கைச் செலவு குறைந்த நகராக இந்தியாவின் மும்பை, புதுடில்லி என்பன இடம்பெற்றுள்ளன.

◇ 24 மணி நேரத்தில் 46 ஏவுகணைகளை ஏவி பரிசோதனை செய்த நாடு எது?
தென்கொரியா

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

◎ இந்திய மத்திய நிதி அமைச்சர் யார்?
ப.சிதம்பரம்

◎ சர்வதேச சட்டத்தரணிகளின் பேரவையின் இணைத் தலைவர் யார்?
பரநோஸ் ஹெலெனா

## விளையாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ அண்மையில் டுபாயில் நடைபெற்ற ஓபன் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றெடுத்த வீரர் யார்?
ரோஜர் பெடரர்

◇ "என் தோல் வெள்ளையாக இருந்திருந்தால் இங்கிலாந்து அணியின் தலைவராகியிருப்பேன்" என்று அண்மையில் கூறிய இங்கிலாந்தின் முன்னாள் உதைபந்தாட்ட வீரர் யார்?
சோல் கேம்ப்பெல்

◇ சர்வதேச கிரிக்கெட் சபையின் (IVV) முதலாவது பெண் நடுவராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பவர் யார்?
கெத்ரே க்ரொஸ் (2014, கிரிக்கெட் நடுவர், நியூசிலாந்து)

◇ 2016 ஆம் ஆண்டு சார்க் விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ள நாடு எது?
2016

◇ இவ்வாண்டு (2014) ஆசிய விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ள நாடு எது?
தென்கொரியா

◇ ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வந்த 19 வயது பிரிவினருக்கான பத்தாவது உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை எத்தனையாவது இடத்தைப் பிடித்துக் கொண்டது?
8 ஆவது

◇ மலேசியாவில் நடைபெற்ற நெடுந்தூர ஓட்டப் போட்டியில் அசத்தி வரும் இலங்கை வீரர் யார்?
அசன்த க்ருடி டேவிட்

◇ உலகின் சிறந்த விளையாட்டு வீரருக்கான 'லோரஸ்' விருதினை முதன் முறையாக வென்ற வீரர் யார்?
செபஸ்டியன் வெட்டல்

◇ தெற்காசிய கால்பந்தாட்ட தற்போதைய உதவித் தலைவர் யார்?
ரஞ்சித் ரொட்றிகோ

◇ தனது சுயசரிதையை எழுதும் கிரிக்கெட் வீரர் யார்?
சச்சின் டெண்டுல்கார்

**உலக நாட்டு அழகுராணிகள் பக்கம் நோக்கிய வலை வீசலில்...**

✦ 2014 ஆம் ஆண்டுக்கான ரஷ்ய அழகுராணிப் போட்டியில் வெற்றியீட்டியவர் யார்?
யூலியா அலிபொவர் (வயது-25)

**விருதுகள் பக்கம் வீசிய வலையில்...**

❖ அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற 86 ஆவது (2014) ஒஸ்கார் விருது வழங்கும் நிகழ்வில், மிகச்சிறந்த திரைப்படத்திற்கான விருதினைப் பெற்றுக்கொண்ட திரைப்படம் எது?

12 இயர்ஸ் ஏ ஸ்லேவ்

அதேவேளை, விண்வெளி திரைப்படமான கிரேவிற்றி 7 விருதுகளைப் பெற்றுக்கொண்டது.

- 2014 ஆம் ஆண்டின் பேண்தகைமை அறிக்கையிடல் விருதினைப் பெற்றுக்கொண்ட நிறுவனம் எது?
  ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம்

- கட்டடக் கலைஞர்களுக்காக நடத்தப்பட்ட 'கட்டடக்கலை 2014' கண்காட்சியில் சிறந்த வர்த்தக விற்பனையகத்திற்கான விருதினை வென்ற நிறுவனம் எது?
  ஒரேஞ் இலக்ரிக்

- உலக அளவில் துணிச்சல் மிக்க பெண்களை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்படும் சர்வதேச உயரிய விருது இவ்வருடம் (2014) யாருக்கு வழங்கப்பட்டது?
  இந்தியப் பெண் லட்சுமிக்கு
  கடந்த 2005 இல் அசிட் வீச்சுக்கு இலக்கானார். அசிட் தாக்குதலுக்கு எதிரான இயக்கத்தை நடத்தி வருகின்றார்.

- கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் நாடக கீர்த்தி விருது வழங்கப்பட்ட பேராசிரியர் யார்?
  பேராசிரியர் சி.மௌனகுரு

## அயல் நாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

- இந்தியாவில் வாக்களிக்கப் பணம் கொடுப்போருக்கு அறிவிக்கப்பட்டுள்ள தண்டனை என்ன? ஓராண்டு சிறை

- கடந்த மாதம் (பெப்ரவரி) காலமான பிரபல சினிமா திரைப்பட இயக்குநர் பாலுமகேந்திரா இயக்கிய முதல் தமிழ்த் திரைப்படம் எது?
  'அழியாத கோலங்கள்'

- டேஸ்ட் ஒப் இந்தியா என்ற பிரபலமான இணையத்தளம் நடத்திய கணிப்பில் உலகின் சிறந்த இசையமைப்பாளர் பட்டியலில் இடம்பிடித்த இந்தியாவின் இசையமைப்பாளர் யார்?
  இசைஞானி இளையராஜா

---

**உங்கள் பார்வையில் வலை...**

உங்களது கருத்துக்களை எழுதி, Passport அளவு புகைப்படத்தினையும் இணைத்து அனுப்புங்கள். அவை காலக்கிரமத்தில் வலையில் பிரசுரிக்கப்படும்.

## நான் கேட்டவை, அறிந்தவை, படித்தவை உங்களுக்காக...

- இலங்கையின் முதலாவது தமிழ்ப் பெண் அரச அதிபர் யார்?
  திருமதி இமெல்டா சுகுமார்

- திரைப்பட வளர்ச்சிக்கு உதவும் பரிசுகள் எவை?
  - ஆஸ்கார் - அமெரிக்கா
  - வெனிஸ் - இத்தாலி
  - கேர்ணஸ்- பிரான்ஸ்
  - பெர்லின் - ஜேர்மனி
  - சார்லி சப்ளின் - லண்டன்

- ஆஸ்கார் விருதுக்கென வழங்கப்படும் ஒஸ்கார் சிலையினை உருவாக்கியவர் யார்?
  சிட்ரிக் கிப்பன்

- உலகின் முதன் முதல் ஒஸ்கார் விருதினைப் பெற்ற திரைப்படம் எது?
  'விங்ஸ்'

- Vat இன் விரிவாக்ககம் யாது? Value Added Tax

- ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையில் எத்தனை உறுப்பு நாடுகள் உள்ளன. 47

- இலங்கையில் சிங்கள மொழியில் வெளியான முதலாவது பத்திரிகை எது?
  'லக்மினி பஹன'

### 'பிம்ஸ்டெக்' (Bimstec) உச்சி மாநாடு

பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியான்மார், நேபாளம், இலங்கை, தாய்லாந்து ஆகிய ஏழு நாடுகள் அங்கம் வகிக்கும் தெற்காசிய பிராந்திய அமைப்பே இதுவாகும்.

ஏற்கனவே 'பிஸ்ட் எக்' என்ற பெயருடன் பங்களதேஷ், இந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளே இதில் இடம்பெற்றிருந்ததுடன், 1997 இல் யூன் மாதம் 6 ஆம் திகதி பாங்ஹொக்கில் ஆரம்பிக்கப்பட்டது.

**இதன் முக்கிய நோக்கம் :**

அங்கத்துவ நாடுகளுக்கிடையில் நெருக்கமானதும். பயன்மிக்கதுமான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதே பிம்ஸ்டெக் அமைப்பின் முக்கிய நோக்கமாகும்.
இதில் வர்த்தகம், அபிவிருத்தி, தொழில்நுட்பம், மின்வலு, சுற்றுலாத் துறை மற்றும் விவசாயம் உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட 14 துறைசார் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றன.

உலக சனத்தொகையில் 22 வீதமான 1.3 மில்லியன் மக்கள் இதில் இடம்பெறுகின்றனர். வருடாந்தம் 750 பில்லியன் டொலர் இணைந்த தேசிய உற்பத்தி நிலையைக் கொண்டுள்ளன.

இதன் முதலாவது அரச தலைவர்கள் மாநாடு பாங்ஹொக்கில் நடைபெற்றுள்ளதுடன், இரண்டாவது மாநாடு 2004 இல் இந்தியாவில் நடைபெற்றது.

பிம்ஸ்டெக் அமைப்பின் இந்த வருட (2014) மூன்றாவது மாநாடு kpa hd khh;Ne nga ;Nuh (Nay Pyi Taw) நகரில் கடந்த *04.03.2014* ஆம் திகதி நடைபெற்றது.

இந் மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களும் பங்குபற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ⌖ 'அவுட்டர் நெட்' (Outernet)

இது ஒரு அமெரிக்க நிறுவனமொன்றின் தயாரிப்பில் வெளிவரவுள்ள ஒரு புதுவகை இணைய வசதியைக் கொண்ட வலையமைப்பாகும்.

அதாவது கியூப்சைட் என்னும் சிறு சிறு விண்கலங்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டு கம்பியில்லா இணைய வசதிகளைத் தோற்றுவிக்கும்.

உலகின் எந்த மூலை முடுக்கில் இருந்தாலும் நொடிப் பொழுதில் இன்ரநெட் வசதியை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இது மிக விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளதாகத் தெரியவருகிறது.

---

**வேலைவாய்ப்பு படிவங்கள்**

அரச வர்த்தமானியில் வெளிவருகின்ற அனைத்து வேலைவாய்ப்புப் படிவங்களும் என்னால் வெளியிடப்பட்டு வருகின்றன. அதனை யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் மட்டும் பெற்றுக்கொள்ள முடியும்.

## சந்தா விபரம் - Delivered to Your Home

உங்கள் சந்தா தொகையை சி.என்.எச்.சாள்ஸ் என்ற பெயரில் யாழ். பிரதம தபாலகத்தில் மாற்றக் கூடியதாக காசுக் கட்டளை (Money Order) அனுப்பப் படுதல் வேண்டும். அல்லது உங்கள் பகுதியில் உள்ள கொமர்ஷல் வங்கியில் C.N.H. Charles, Commercial Bank (Stanley Road, Jaffna) 8127011186 என்ற சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்து வங்கி ரசீதுடன் உங்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன அடங்கிய விண்ணப்பத்தினை எனது முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் எத்தனையாவது இழையிலிருந்து அனுப்ப வேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள். இதழின் பிரதிகள் கண்ணியமாக உங்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.



**50/- விலைக் கழிவுடன் வருடச் சந்தா 250/- மட்டுமே.**


## இலங்கையில் தேசிய அடையாள அட்டை...

2014.02.28 ஆம் திகதி முதல் இலங்கையில் ஆட்பதிவுத் திணைக் களத்தினால் தேசிய அடையாள அட்டைகள் முதல் தடவையாக இரண்டு மொழிகளிலும் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன.

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகள் 2016 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்படவுள்ளதுடன், 16.5 மில்லியன் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

பாக்கிஸ்தானில் அமைந்துள்ள **NADRA (National Data base and Registration Authority)** நிறுவன உதவியுடன் **e NIC** அடையாள அட்டைகள் 15 வயதிற்கு மேற்பட்டோருக்கு வழங்கப்படவுள்ளன.

புதிய அடையாள அட்டைகள் **bio metric** பாதுகாப்பு முறைகளை **(Finger print, Bar codes)** உள்ளடக்கியுள்ளன.

இலங்கையின் அடையாள அட்டையில் உள்ள **'X'** எனும் குறியீடு வாக்களிக்க தகுதியற்றவர் என்பதைக் குறிப்பதாகும்.

இலங்கையில் முதலாவது தேசிய அடையாள அட்டை 1972.10.16 வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நுண்ணறிவு – IQ

மாதாந்தம் வெளியிடப்படும் இப் பொது அறிவுத் தொகுப்புடன் நுண்ணறிவு வினா-விடையினையும் சிறிதளவு சேர்த்து வெளியிட்டால் என்ன? என்று வாசகர்களால் கோரிக்கைகள், ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இக்கோரிக்கை எனக்கு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கிறது. எனது நலன் அல்ல, உங்கள் நலன் தான் எனக்கு முக்கியம். இருந்தபோதும் நீங்கள் படித்துச் சுவைத்துச் செய்து பார்த்த நுண்ணறிவு விடயம் ஒன்றோ இரண்டோ ஏனையவர்களின் நன்மை கருதி எனக்கு அனுப்பி வையுங்கள். வலையில் அவ்வப்போது பிரசுரிக்கப்படும்.

**வாழ்க வையகம் - வாழ்க வளமுடன்**

தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல : 0776913337
heyncharles@gmail.com